# சிக்மன்ட் பிரொய்டின் உளப்பகுப்பாய்வு அணுகுமுறை

**Dr. A.L.M. Riyal**[1]

[1]Senior Lecturer, Department of Social Sciences
South Eastern University of Sri Lanka.

Corresponding author's e-mail: amohamedriyal@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இக்கட்டுரையானது சிக்மன்ட் பிரொய்டின் உளப்பகுப்பாய்வு அணுகுமுறை குறித்த பிரச்சினையை பகுப்பாய்வு செய்வதாக அமைகின்றது. உளப்பகுப்பாய்வு நரம்பு நோய்கள் அல்லது உளப் பிணி காரணமாக நோயாளியின் மனதில் மறைந்து போன அல்லது மறைந்து போன எண்ணக்கருக்களை தேடுவதன் மூலம் வெளிக் கொணரப்படும் சிகிச்சை முறை என்று கூற முடியும். நனவு, நனவிலி என உளத்தைப் பகுத்து, மனித நடத்தைகள் அனைத்துக்கும் நனவிலியுளமே அடித்தளமாகும் எனும் கருதுகோளின் அடிப்படையில் உளப்பகுப்பாய்வு செயற்படுகிறது இவ்வாய்வின் நோக்கம், உளப்பிரச்சினை தோன்றுவதற்கு பிரொய்ட் அடையாளப்படுத்தும் அடிப்படைக் காரணியைக் கண்டறிதல், உளச்சிகிச்சையில் உளப்பகுப்பாய்வு அணுகுமுறை எவ்வாறு பிரயோகிக்கப்படுகிறது என்பதையும் அதில் பயன்படுத்தப்படும் முறைகளையும், நுட்பங்களையும் விளங்கிக் கொள்ளல், உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு மற்றும் உளப்பகுப்பாய்வு உளச்சிகிச்சை எதிர்கொள்ளும் விமர்சனங்களை அடையாளப்படுத்துதல் போன்றனவும் தொடர்புபடுத்தி இதில் ஆராயப்படுகின்றது இவ்வாய்வானது கோட்பாட்டு ரீதியானதும், பிரயோக ரீதியானதுமான ஆய்வாகவுள்ளது இதன் சிறப்பம்சமாகும். இவ்வாய்விற்கான தரவுகள் நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. நனவிலி மனதில் அடக்கி வைக்கப்படும் எண்ணங்களே உளநோய்களுக்குக் காரணமாகின்றன என்பதும் அத்தகைய எண்ணங்களை, உளப்பகுப்பாய்வு பயன்படுத்தும் கனவுப் பகுப்பாய்வு போன்ற முறைகளூடாக வெளிக்கொணரலாம் என்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்:** உளப்பகுப்பாய்வு, நனவு, நனவிலி. உளநோய், கனவு.

## ஆய்வின் அறிமுகம்

உளப்பகுப்பாய்வு, உளவியல் கோட்பாடுகளில் மிக முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக உள்ளது. ஆஸ்திரிய உளவியலாளரான சிக்மன்ட் பிரொய்டினால் 1909ல் கிளாக் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தப்பட்ட விரிவுரைத் தொடரின்போது உளப்பகுப்பாய்வு உளவியல் அறிமுகம் செய்யப்பட்டது.''உளப்பகுப்பாய்வை ''நனவிலியின் அறிவியல்'' என்றே பிரொய்ட் கூறுகிறார்(Wax, M. L.1986:Pp,264-265). பிரொய்ட் ஓர் உளநோய் சிகிச்சையாளராவார். நரம்பு நோய் வைத்தியத்தில் தேர்ச்சி பெற்ற இவர் தனது மருத்துவ சிகிச்சை நிலையத்தினூடாக உள ஆய்வினை மேற்கொண்டு உளநோய்க்கான காரணங்களைக் கண்டறிந்து சிகிச்சைகளை வழங்கினார். இதுவே உளப்பகுப்பாய்வுக் அணுகுமுறைக்கு அடிப்படையாக அமைந்தது.(Farrell, 1981, pp. 202-205).

பிரொய்டின் அபிப்பிராயப்படி பொது உளவியல் முறைகளினால் ஆராய முடியாதிருக்கும் உளச்செயற்பாடு பற்றியதொரு விசாரணையைக் குறிப்பதும், நரம்பியல் பிறழ்வுகளின் சிகிச்சைக்கான விசாரணை சார்ந்ததொரு முறையைக் குறிப்பதும், படிப்படியாக ஒரு புதிய விஞ்ஞானத்துறையாக உருப்பெற்றதும், பகுப்பாய்வு முறைகளினடியாகப் பெறப்பட்டதுமான உளவியல் முறையைக் குறிப்பதுமான பெயரே உளப்பகுப்பாய்வாகும்(கந்தசாமி அன்டன்டயஸ், 2003:131)

அமைப்பு வாதம் நனவு நிலைபற்றிய ஓர் விஞ்ஞான துறையாகும் நனவு நிலை அனுபத்துடன் கூடியது உளவாழ்க்கையில் நனவு நிலை அம்சங்கள் நனவு நிலக்கு எட்டியதாக இல்லை நோயாளிகளை அடக்கி வைப்பதனால் பலவற்றை மறந்து விடுகின்றார்கள் ஆனால் நனவிலி நிலையில் அவை செயற்படலாம் இது பற்றி நோயாளிகள் அறிந்திருப்பதில்லை என்று பிரொய்ட் கருதினார்(Grünbaum,A.1986:pp,217-284). உளவியல் நலவியல் முறையை அறிமுகஞ் செய்த பிரொய்ட் அன்றாட வாழ்வினில் நடைபெற்ற சில அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு சில கருத்துக்களை பகுப்பாய்வு செய்தார் பிரொய்டின் உளப்பகுப்பாய்வு கோட்பாடு அணுகுமுறை பிரதானமாக பின்வருவனவற்றை ஆராய்கின்றது.

1. மனித நடத்தையின் இயல்பினையும் போக்கினையும் நிருணயிப்பதில் உள்ளம் பெரும் பங்கு கொள்கின்றது
2. நனவிலி உள்ளத்தில ஒருவரால் நேரடியாக உணர முடியாத பல்வெறு எண்ணங்கள் அனுபவங்கள் எழுச்சிகள் நோக்கங்கள் ஆகியன மறைந்துள்ளன இவை பெரும்பாலும் நனவ நிலையிலிருந்து நனவிலி நிலைக்குள் தசுக்கப்பட்டவையாகும்
3. இவை பால் உணர்ச்சியுடன் தொடர்புடையவை இவ்வுண்ச்சி சிறு குழந்தைகளிடத்தும் காணப்படுகின்றது
4. ஆண்மை வளர்ச்சியின் போக்கைக் கட்டுப்படுத்துவதில் இளம்பருவ அனுபவங்கள் பெரும்பங்கினை வகிக்கின்றன (Gay, 1989: p. xx).

அடக்கம் அதிசயட் ஆகிய இரண்டையும் கொண்டு இயல்பூக்கம் மற்றும் பாலியல் என்பவற்றில் ஏற்படும் மாற்றத்தை ஆய்வு செய்து ஆளுமை அமைப்பை விளக்கினார்

**ஆய்வின் நோக்கம்**

பிரொய்டினுடைய உளப்பகுப்பாய்வு அணுகுமுறை குறிப்பிடப்படும் கருத்துக்களையும் அதில் ஏற்பட்ட பிரச்சினைகளையும் அவசியத்தையும் வெளிக் கொணர்வதஎ மூலம் உளப்பிரச்சினைகள் தோன்றுவதற்கு சிக்மன்ட் பிரொய்ட் அடையாளப்படுத்தும் அடிப்படைக் காரணியைக் கண்டறிதலை நோக்காகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக பல்வேறுபட்ட ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, பிரொய்ட் ஆல் எழுதப்பட்ட "An outline of psychoanalysis " எனும் நூலினை ஆய்வு செய்வதற்கான ஓர் பகுப்பாய்வு முறையாக அமைந்திருக்கின்றது. இவ்வாய்வானது கோட்பாட்டு ரீதியானதும், பிரயோக ரீதியானதுமான ஆய்வாக அமைகிறது. அந்தவகையில் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள் வாயிலாக இவ்வாய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்வதனை நோக்கமாக கொண்டு இவ்வாய்வு அமைகிறது.. சுருக்கமாக குறிப்பிடுவோமாயின் உளவியலில் இது தொடர்பாக எழுத்து வடிவில் வெளிவந்த ஆங்கில, தமிழ் வடிவ தகவல்களை ஒன்று திரட்டி இவ்வாய்வு மிகவும் நேர்த்தியான முறையில் வடிவமைக்கப்படுகின்றது.

**ஆய்வு தொடர்பான விவாதம்**

பிரொய்ட் மனித மனதை நனவு. முன்நனவு. நனவிலி என்று பிரித்து நோக்குகிறார். இம் முப்பிரிவுக்குள்ளும் நனவிலி நிலையையே தனது பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தினார்(Freud,S. 1949:p,17). சமூக அமைப்புடன் தனிளாள் தன்னைச் சீராக்கிக் கொள்ள முற்படுத்துகின்றான் என்பது தொழிற்பாட்டு வாதமாகும். ஆனால் பிரொய்ட் தனியாள் சமூகத்துடன் போராடுகின்றான் என்றும் கூறினார். மனமானது ஒன்றுடன் ஒன்று தொடர்ச்சியாக எதிரிடையாகவும் சமரசமாகவும் பிறப்பிலிருந்தே செயற்படுவாதால் அவனது நடத்தைப் பண்புகள் குறித்த ஆளுமைக்கு அடித்தளமாக அமைகின்றது (Edelson, M 1986:pp232-234).

நனவு (Conscious)

நனவு மனமானது நிஜ வாழ்வை ஒத்த அர்த்தமுள்ளது. இதை வெளிமனம் எனவும் அழைப்பர். இது உள்ளத்தின் மேற்பகுதி அல்லது சிந்தனை நிலையாகும். நாம் கண்டுணரக்கூடியது அனைத்தும் தான் வெளி மனதை உருவாக்குகிறது. நனவு மனம் எப்போதும் தொடர்ந்து மாறிக் கொண்டேயிருக்கும் நிலையில் இருப்பதால் நடப்பவை அனைத்தையும் அப்படியே உணர முடிகிறது. இம் மனதிலுள்ள விடயங்களை இலகுவாக நினைவு கூறக்கூடியதாயிருக்கும். பொதுவாக நாம் மனம் என்று குறிப்பிடுவது நனவு மனதையேயாகும் (Freud, S.1949:p15).

முன்நனவு (Subconscious)

இதனை முன்நனவு மனம், நனவடி மனம் அல்லது இடைமனம் என அழைப்பர். இது உடனுக்குடன் தற்காலிகமாகச் செய்திகளைச் சேகரித்து வைக்கக்கூடிய இடமாகும். இதில் சேகரித்து வைக்கப்பட்ட செய்திகளைத் தற்சோதனை மூலம் வெளிக் கொணரலாம். முன்நனவு மனதில் பதிந்து கிடக்கும் செய்திகளை ஒருவர் வெகு எளிதில் நினைவு கூற முடியும். மிக எளிதாக வெளிக்கொணரப்படுகிற கடந்தகால நிகழ்ச்சிகள் இதற்குத் தகுந்த உதாரணங்களாகும்(Ibid).

நனவிலி (Unconscious)

இப் பகுதியை மறை மனம் அல்லது ஆழ்மனம் எனவும் அழைப்பர். சில கடந்த கால அனுபவங்களை எளிதில் வெளிக்கொணர முடியாது. பொதுவாக இவைகள் வேதனை மிக்க நிகழ்ச்சிகளாக இருப்பதால் ஆழ்மனதில் அடக்கி வைக்கப்பட்டுள்ளன. நனவிலி மனதிலுள்ளவை முயன்றாலும் நினைவுக்கு வராது. மனித நடத்தையின் பெரும் பகுதி உணர்வற்ற நிலையினால்

கட்டுப்படுத்தப்படுகிறது. உளப்பகுப்பாய்வு என்பது நனவிலி மனதைப் பகுப்பாய்வு செய்வதையே குறிக்கும்.

நனவிலி என்பது நனவு நிலையில் அறிய விரும்பாத அனைத்து விடயங்களையும் களஞ்சியப்படுத்துகிற உள்ளத்தின் ஒரு பகுதியாகும். சமூகத்தால் அங்கீகரிக்கமுடியாத விருப்புக்கள், நிறைவேறாத ஆசைகள், பாலியற் பற்றுக்கள், சிறுபராயப் பாலியல் விருப்புக்கள், தீயசிந்தனைகள், துயர ஞாபகங்கள், நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள் பற்றிய அசௌகரியம் தரவல்ல உணர்வுள்ளடக்கங்கள், அலைக்கழிக்கும் நினைவுகள், ஆக்கிரமிப்பு உந்தல்கள் என்பனவே ஒடுக்கப்பட்ட நிலையில் (Repressed) நனவிலியின் உள்ளடக்கமாக அமைகிறது

நனவிலியில் உள்ளடங்கிய விடயங்களை நாம் முழுமையாக உணராத நிலையில் செயற்படுகிறோம். அதாவது ஒருவனால் அறியமுடியாத பல எழுச்சிகளும் எண்ணங்களும் நோக்கங்களும் ஆசைகளும் ஒடுக்கப்பட்டுள்ளன. நனவிலி மனதில் ஒடுக்கப்பட்டுள்ள ஆசைகள் பெரும்பாலும் பாலியல் தொடர்பானவையாகும். இப் பாலுணர்வு வெறும் காமத்தைக் குறிக்கும் சொல்லாக மட்டுமன்றி காதலுணர்வு, அன்பு, மகிழ்ச்சி என்பவற்றையும் பாலுணர்வு என்றே பிரொய்ட் கருதினார்.

நனவிலி மனம் தன்னை விரிவுபடுத்திக் கொள்ள பயன்படுத்துகின்ற முக்கிய இயங்குமுறை ஒடுக்குதல் ஆகும். நனவு மனதிற்குள்ளாகாத குற்ற மனப்பான்மை வெட்கக்கேடு, மனமுறிவு ஆகிய உணர்ச்சிகளை அளிக்கின்ற சில அனுபவங்கள் நனவிலி மனதினால் ஈர்க்கப்படுகின்றன. இந்த ஈர்க்கப்படுகின்ற இயல்பு ஒடுக்குதல் எனப்படும். ஒடுக்குதல் நிகழும் போது தனியன் தன்னுள்ளே சில அனுபவங்கள் ஈர்க்கப்படுவதை அறிவதில்லை என்கிறார். இவ்வாறு ஒடுக்கப்பட்ட அனுபவங்களை அறியும் முறையே உளப்பகுப்பாய்வாகும் (Ibid:pp,22-31).

பொதுவாக சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத உணர்ச்சிகளும், காம இச்சைகளுமே நனவிலியில் அமுந்திக் கிடப்பதாகவும், அவ்வுணர்ச்சிகள் மேலெழுந்து ஆதிக்கம் செலுத்த முயல்கின்றனவென்றும் மனிதன் அவற்றை அடக்க முயல்வதால் மனதில் போராட்டம் நிகழ்கின்றதென்றும் அதன் விளைவின்படி அவனுடைய தன்மையும் நடத்தையும் அமைகின்றனவென்றும் பிரொய்ட் கூறுகிறார்(Wax,M. L. 1986: Pp, 264-265).

உள நரம்பு நோயினால் பீடிக்கப்படுவதற்கு நனவிலி மனதில் ஒடுக்கப்படும் ஆசைகளே காரணம் என பிரொய்ட் கருதினார். நனவிலி மனதில் ஒடுக்கப்பட்டவையே உளநோய்க்குறிகளாக மாறுகின்றன என்பது என்பது இவரின் அடிப்படை வாதமாகும். (Notturno,M.A.,&McHugh,P.R.1986:pp,250-252). எனவே தான் நனவிலி மனதை பகுப்பாய்வு செய்து உளநோய்கான காரணத்தை அறிந்து குணப்படுத்த முடியுமென பிரொய்ட் நம்பினார்.

உளச்சிகிச்சை என்பது உள ரீதியான பிரச்சினைகள், ஒழுங்கீனங்களை இனங்கண்டு அவற்றிற்குச் சிகிச்சையளிப்பதனூடாக அதனைத் தவிர்த்து ஆளுமையில் விருத்தியை ஏற்படுத்த உதவும் முறையாகும்(Colby,K.M.1960:p,15).உளச்சிகிச்சை முறை பின்வரும் மூன்று நோக்கங்களைப் பிரதானமாகக் கொண்டுள்ளது.

1. உள ஒழுங்கீனங்களை அறிந்து கொள்ளல்,
2. உள ஒழுங்கீனங்களுக்குச் சிகிச்சையளித்தல்
3. உள ஒழுங்கீனங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான ஆளுமையை விருத்தி செய்தல்

உளரீதியான பிறழ்வுகளுக்கு நடைமுறையில் பல சிகிச்சைமுறைகள் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு மூன்று பெரும் பிரிவாக வகைப்படுத்தலாம்.

1. தன்னறி சிகிச்சை (Insight Therapy)
2. நடத்தை சிகிச்சை (Behavioural Therapy)
3. உயிரிமருந்து சிகிச்சை (Biomedical Therapy)

இதில் தன்னறி சிகிச்சையின் ஒரு பிரிவாக அமைவதே உளப்பகுப்பாய்வு உளச்சிகிச்சையாகும் தனது மாறுபட்ட நடத்தைகளுக்கான காரணிகளை நோயாளியே உணர்ந்து கொள்வதாகும். இதில் சிகிச்சையாளருக்கும் நோயாளிக்குமிடையே நெருக்கமான ஊடாடல்கள் (Interactions)இருக்கும். குறிப்பாக, மொழி ஊடாடல்கள் சிறப்பிடம் வகிக்கும். அப்போதுதான் நோயாளியைத் தன்னறிவில் (Self-Knowledge) ஈடுபடுத்த முடியும். இம்முறையிலுள்ள அணுகுமுறைகளில் (சுமார்10) உள இயக்காற்றல் (Psychodynamic) அணுகுமுறையும் ஒன்று. இது உளப்பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டதாகும் (Grünbaum,A.1986:pp,217-244).

உளப்பகுப்பாய்வு அணுகுமுறையில் நோய்க்குறிகளைப் போக்குவதற்குத் துப்புரவாக்க முறை (Cathartic Method) பயன்படுத்தப்படுகிறது. உள்ளத்தில் நோய்க்குறிகளை உருவாக்குகின்ற பாதிப்புகளை முறைப்படி நனவு மனத்தின் வழியாக வெளிக்கொண்டு வருவதன் மூலம் நோய்க்குறிகளைப் போக்க முடியும் என்பதாகும்(Holt,R.R. 1986:pp,242-244).
உளப்பகுப்பாய்வு அணுகுமுறையானது, இரு பிரதான முறைகளை உளச்சிகிச்சையில் பயன்படுத்துகிறது.

1. சுயாதீன இயைபு முறை (Free Association)
2. கனவுப்பகுப்பாய்வு (Dream Analysis)

சுயாதீன இயைபு முறைக்குப் ''பேச்சு'' (Talk) அடிப்படையாகவுள்ளது. இதனால் எண்ணங்கள் பேச்சாக மாறி எவ்வித நிர்ப்பந்தத்திற்கும் உட்படாமல் தொடரியலாகத் தானாக (Spontaneous) வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். இத்தகு வெளிப்பாட்டை எண்ணங்களின் ,,சுய வெளிப்பாடு" (Self Expression) என உளப்பகுப்பாய்வு சுட்டுகிறது. சுயாதீன இயைபு முறையைக் கையாளும் போது இடைமாற்றம் (Transference), தடை (Resistance) என்பன ஏற்படுகின்றன. சுயாதீன இயைபு முறையின் பயன்பாடு நோயாளியை வினைத்துணிவு கொள்ளச் செய்கிறது. இது தனக்குத்தானே உதவிக் கொள்ள நோயாளிக்கு உதவுகிற உத்தியாகவுள்ளது. நோயாளிகள் தங்களை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்வதற்கான ஒரு வழிவகையாக உளப்பகுப்பாய்வைப் பயன்படுத்த முடியும். இதன்மூலம் அவர்கள் தங்கள் சொந்தப் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளக் கூடியதாயிருக்கும் (Greenberg,R.P. 1986: pp,240-241).

கனவுகள் பற்றிய ஒரு கோட்பாட்டையும், அவற்றைப் பொருள் விளக்கம் செய்யும் உத்தியையும் உருவாக்கிய பெருமை பிரொய்ட்டையே சாரும். பிரொய்டின் ''கனவுகளின் பொருள் விளக்கம்''(Interpretation of dreams)1899 நவம்பரில் முதன்முதலாக வெளியிடப்பட்டது. கனவு என்பது மனித நடத்தைகளில் ஒன்று. இதனை "தூக்கநிலை நடத்தைகள்" எனலாம். கனவு என்பது ''தூக்கத்தின் பாதுகாவலாளி'' என்கிறார் பிரொய்ட் (Freud,1981,Vol.5:p,678). கனவுகள் அனைத்தும் அர்த்தமுள்ளவையாகவும் உட்பொருள் பொதிந்தவையாகவும் விளங்குசின்றன ஒவ்வொரு கனவுக்கும் பின்னால் ஏதேனும் ஒரு உளக்கூறு அல்லது பல உளக்கூறுகள் தொடர்புபட்டிருக்கும். அந்த உளக்கூறுகளின் உந்துதலால்தான் கனவுகள் பிறக்கின்றன. கனவு உருவாக்கத்திற்கான மூலகாரணிஇந்த உந்துதலாகத்தான் இருக்க முடியும். இம்மூல காரணியைக் கனவுகளின் பொருளாகக் காண்கிறார் பிரொய்ட். கனவுகளின் பொருளைக் கண்டுபிடிப்பதுதான் கனவுப் பகுப்பாய்வு அணுகுமுறையாகும். பிரொய்டியத்திற்கு கனவுகள் மூலப்பொருட்களாக விளங்குகின்றன. நனவிலியைக் காணவும் அதன் இயல்பைப் புரிந்து கொள்வதற்கும் துணைபுரியும் கனவை ''நனவிலியின் அரசபாதை'' என்கிறார் பிரொய்ட் (Ibid:608).

நிறைவேறாத உள்ளுணர்ச்சி விருப்பங்கள் கனவுக் கட்டமைப்பிற்கான ஆற்றலை வழங்குகின்றன குழந்தைப் பருவத்திலான பாலியல் தடைகள், ஏமாற்றங்கள், தண்டிப்புக்கள், அச்சுறுத்தல்கள், பதட்டங்கள் போன்ற அனுபவங்கள் கனவுக் கட்டமைப்பின் ஆதாரங்களாகின்றன. குழந்தைப் பருவ (நனவிலி) வேட்கைகளின் உயிரோட்டமே கனவுகள் ஆகும்(Ernest Jones,1980:390). நோய்க்குறிகள் கனவுகளாகவும் வெளிப்படும் என்பதை கண்டுகொண்ட பிரொய்ட் தொடர்ந்து மேற்கொண்ட ஆய்வின் முடிவாக கனவு உருவாக்கமும் நோய்க்குறி உருவாக்கமும் இணையாகவிருப்பதை முன்வைக்கிறார் சாதாரண மனிதரின் கனவுகளுக்கும் நோயாளியின் கனவுகளுக்குமிடையே அதிக வேறுபாடில்லை. பிரொய்டியத்தின்படி சராசரி மனிதர் என்பது குறைந்தபட்ச நரம்பு நோய்க்கு ஆளான மனிதரையே குறிக்கிறது(Grünbaum,A.1986:p,217).

உளப் பகுப்பாய்வு உளப்பிணி நிவாரண முறையாக நீண்ட காலமாக முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. மனித ஆளுமை குழந்தைப் பருவத்திலே கட்டியெழுப்பப்படுவதாக புரொய்ட் தமது ஆய்வுகளிலிருந்து முடிவுக்கு வந்தார். குழந்தை அதன் 5 வருட காலத்துள் குணாம்ச ரீதியில் வேறுபட்ட பல கட்டங்களைக் கடப்பதாக அவர் நிரூபிக்க முயன்றார்.இந்தக் கட்டங்கள் ஒவ்வொன்றும் குழந்தையின் பாலியல் நடவடிக்கைகளாக உளப் பகுப்பாய்வு விளக்கியது. புரொய்டின் உளவியல் கோட்பாடுகளில் உயிரியல், பாலியல், இயல்பூக்கிகள் மைய இடத்தைப் பெற்றிருந்தன (அனஸ்,எம்.எஸ்.எம்.,1996:ப,96).

**ஆய்வு தொடர்பான முடிவுகள்**

ஒரு அழுத்தமான சிந்தனைப் பள்ளியாகவோ முறைமையான உளவியல் கோட்பாடாகவோ உளப் பகுப்பாய்வு கருதப்படுவதில்லை. கல்வி ஆய்வாளர் வட்டத்துக்கு வெளியிலேயே இந்த அணுகுமுறை பெரிதும் உலவி வந்தமை இதற்கொரு காரணமாக இருக்கலாம். உளச் செயற்பாட்டைப் பற்றி ஒரு

முறையான நிலைப்பாட்டை இவ்வியக்கத்தினர் எடுக்கவில்லை. குறிப்பாகப் புலன் உணர்வு, கற்றல் காண்டல் போன்ற உளச் செயற்பாட்டின் பாகங்களைப் பற்றிக் குறைந்தளவு கவனமே செலுத்தப்பட்டுள்ளது. உளப் பிணியை அகற்றுவதே அவர்களின் பிரதான நோக்கமாகும். இதனால் உளப் பகுப்பாய்வு ஒரு கோட்பாடு என்பதிலும் அது பிரயோகத் தன்மை அதிகம் கொண்டது எனலாம். இவ்வியக்கத்தினர் நோய்க்காரணவியல் ஆய்வையும் உளப்பிணி நிவாரணத்தையுமே தமது செயற்பாட்டின் மையமாகக் கொண்டிரந்தனர். உளப்பகுப்பாய்வு அணுகுமுறைகள் உளப் பிணியினைத் தீர்ப்பதற்கான பரிசோதனை அல்லாத மருத்துவ நுட்பவியல் என்ற கருத்துக்கே அதிகம் இடமளிப்பதாக உள்ளது. எனினும் நவீன உளவியலின் செல்வாக்கு மிக்க இயக்கமாக உளப்பகுப்பாய்வு விளங்குகிறது, சமூக விஞ்ஞானங்கள், கலை, ஒழுக்கவியல், சமயஆய்வு, மெய்யியல் போன்ற துறைகளின் ஆய்வகளில் உளப்பகுப்பாய்வு அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகிறது(அ.நுா.).

பிந்திய உளப் பகுப்பாய்வாளர்கள் புரொய்டின் கொள்கைகள் திருத்தப்பட வேண்டுட் என்றனர். அல்பிரட் எட்லர், எரிக்.்.ப்ரொம் லக்கான், கரென் ஹோர்னி போன்ற பிந்திய புரொய்டியவாதிகள் மனிதனின் ஆளுமையை வடிவமைப்பதில் இயல்பூக்கிகளை விட தனிநபரைச் சூழ்ந்துள்ள சமூகம், பண்பாடு, மற்றும் பகுத்தறிவு நிலை என்பவற்றினது பங்கினையும் கவனத்திற் கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிˇறனர். அட்லர் என்பார் பிராய்டியத்தின் முக்கிய கூறான பாலுணர்ச்சியை எதிர்த்தனர். கார்ள் பொப்பர் உளப்பகுப்பாய்வு ஓர் போலி விஞ்ஞானம் என்கிறார். ஏனெனில் அதனை பரிசோதிக்கவோஇ தவறென நிரூபிக்கவோ முடியாது. ஏனெனில் சிக்மன்ட் பிராய்டின் சிந்தனைகள் கருத்துக்கள் சாாந்த எண்ணக்கருக்கள் ஆகும் என்கிறார். (Popper, K.1986:p,254) பிரொய்ட் அனைத்தையும் ஏக பாலியத்திற்குள் அமைக்கிறார் என கார்ள் யுங் குற்றம் சாட்டுகிறார் (Rand,N.,&Torok,M. 1997:p,187).உளப்பகுப்பாய்வு அணுகுமுறையைப் சிறந்த பயிற்சி பெற்ற உளப்பகுப்பாய்வாளர்கள் மட்டுமே பிரயோகிக்க முடியும். எனவே உளப்பகுப்பாய்வு உளச்சிகிச்சை தொடர்பான பயிற்சிகளை வழங்க ஆய்வாளர்கள் முன்வர வேண்டும்.

**நூற்பெயர்க்கோவை**


Colby, K. M. (1960). An introduction to psychoanalytic research. New York: Basic.

Edelson, M. (1986). The evidential value of the psychoanalyst's clinical data. Behavioral and Brain Sciences, 9,

Farrell, B. A. (1981). The standing of psychoanalysis. Oxford: Oxford University Press.

Freud, S. (1949). An outline of psychoanalysis. New York: Norton.

Freud.S (1981), The standard Editions of Complete Psychological works of Sigmund Freud (24 volumes), Translated by James Strachey, The Hogarth Press & The Institute of Psycho-Analysis, London.

Gay, P. (1989). Sigmund Freud: A brief life. In J. Strachy (Ed.), An outline of psychoanalysis , New York: Norton.

Greenberg, R. P. (1986). The case against Freud's cases. Behavioral and Brain Sciences, 9, Grünbaum, A. (1986). Précis of The foundations of psychoanalysis: A philosophical critique. Behavioral and Brain Sciences, 9,.

Holt, R. R. (1986). Some reflections on testing psychoanalytic hypotheses. Behavioral and Brain Sciences, 9,.

Notturno, M. A., & McHugh, P. R. (1986). Is Freudian psychoanalytic theory really falsifiable? Behavioral and Brain Sciences, 9.

Popper, K. (1986). Predicting overt behavior versus predicting hidden states. Behavioral and Brain Sciences, 9,

Rand, N., & Torok, M. (1997). Questions for Freud: The secret history of psychoanalysis. Cambridge, MA: Harvard University Press.

Wax, M. L. (1986). Psychoanalysis: Conventional wisdom, self knowledge, or inexact science? Behavioral and Brain Sciences, 9,.

அனஸ்,எம்.எஸ்.எம்., (1996) விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும் ஒரு முறையியல் நோக்கு, பண்பாட்டு ஆய்வு வட்டம்இ பேராதனை.

கந்தசாமி அன்டன்டயஸ், (2003) உளப்பகுப்பாய்வு நோக்கில் சிலம்பில் சில செய்திகள், சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு,